தலைப்பு 277 – மொனராகலை மாவட்ட செயலகம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 277 – மொனராகலை மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மொனராகலை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2025 மே மாதம் 14 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே மாதம் 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, மொனராகலை மாவட்ட செயலகத்தின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் மொனராகலை மாவட்ட செயலகத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை மொனராகலை மாவட்ட செயலகம், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.
தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம், திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

(அ) வருமான பெறுவனவு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் ஈட்டப்பட்ட ரூபா.1,856,750 வருமானம், காசுப்பாய்ச்சல் அறிக்கையில் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசுப்பாய்வின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும், அது தொழில்பாட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசுப்பாய்வாகக் காட்டப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்வரும் ஆண்டுகளில் முதலீட்டுச் செயற்பாடு-களிலிருந்து பெறப்படும் காசுப் பாய்வுகளின் கீழ் அதனைக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.”	எதிர்கால ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது, சொத்துக்களை விற்றதன் மூலம் கிடைத்த வருமானத்தை முதலீட்டுச் செயற்பாடுகளினால் பெறப்பட்ட காசுப்பாய்வின் கீழ் காட்டப்படுதல் வேண்டும்.

(ஆ) ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	ரூபா. 22,550,000/- பெறுமதியான 10 உழவு இயந்திரங்களும் (Tractors) 10 உழவு இயந்திர பவுசர்களும் (Tractor Bowsers) கணக்கில் பதியப்படாமை காரணமாக, நிதியியல் அல்லாத சொத்துக்களின் பெறுமதி அந்தத்	2025 ஆம் நிதியாண்டில் நிதியியல் அல்லாத சொத்துக்கள் (Non-Financial Assets) பிரிவின் கீழ் அவற்றை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மாவட்டச் செயலகத்திற்குச் (District Secretariat) சொந்தமான அனைத்துச் சொத்துக்களையும் கணக்கில் பதிய ஒரு வேலைத்திட்டத்தை

	தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.		தயாரித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
(ii)	வெல்லவாய செயலகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு கட்டிடத்தின் பெறுமதி ரூபா.1,759,179/- ஐ, 9151 குறியீட்டு இலக்கத்தின் கீழ் கட்டிடங்கள் எனக் கணக்கில் பதியாததன் காரணமாக, நிதியியல் அல்லாத சொத்துக்கள் அந்தப் பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.	ஏற்கனவே இருந்த கட்டிடம் திருத்தப்பட்டுள்ளதுடன் அதனை மீள்மதிப்பீடு செய்து, அந்தப் பெறுமதியை கணக்கில் பதிய நடவடிக்கை எடுக்கப்படும்.	கட்டப்பட்டிருந்த கட்டிடத்தின் பெறுமதியைக் கட்டிடங்கள் எனும் கணக்கின் கீழ் பதிய வேண்டும்.
(iii)	தணமல்வில மற்றும் வெல்லவாய பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான 13 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.	கட்டிடங்களை மதிப்பீடு செய்து தருமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.	எதிர்வரும் ஆண்டில் நிதி அறிக்கைகளை) தயாரிக்கும் போது, கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கில் பதிய வேண்டும்.
(iv)	2013 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட மடுல்ல பிரதேச செயலகத்திற்கு சொந்தமான ரூபா.5,251,000 பெறுமதியான 05 கட்டிடங்கள், கணக்காய்வு திகதியான 2025 மார்ச் 17 ஆம் திகதியன்று சிதைவடைந்து கைவிடப்பட்டிருந்தன. இந்தப் பெறுமதியை நிதி அறிக்கைகளில் சரிசெய்யாமை காரணமாக, நிதியியல் அல்லாத சொத்துக்களின் பெறுமதி அந்த தொகையால் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.	கட்டிடங்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.	சிதைவடைந்த நிலையில் உள்ள, பாவனைக்கு உதவாத கட்டிடங்களின் பெறுமதியை நிதி அறிக்கைகளில் சரிசெய்தல் வேண்டும்.
(v)	தேசிய அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு சொந்தமான ரூபா.7,200,000 பெறுமதியான ஒரு மோட்டார் லொறி வாகனத்தையும், உடுதும்பர பிரதேச செயலகத்திற்கு சொந்தமான ரூபா.400,000 பெறுமதியான ஒரு நீர்த்தாங்கி பவுசர் வாகனத்தையும், வாகனங்களின் கீழ் கணக்கில் பதியப்பட்டதன் (Giniyabata Kirima) காரணமாக, நிதியியல் அல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா.7,600,000 ஆல் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் மத்திய நிலையத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, லொறி வாகனத்தை சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்கும் அத்துடன், நீர்த்தாங்கி வாகனம் பாவனைக்கு எடுக்க முடியாத நிலையில் இருப்பதனால், அதனைப் பொறுப்பேற்று முறையான வகையில் அகற்றுவதற்கு டவடிக்கை எடுக்கப்படும்.	முறையான வகையில் நடவடிக்கை எடுத்து, வேறு நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களைத் திரும்ப ஒப்படைக்கவோ பொறுப்பேற்கவோ நடவடிக்கை எடுத்து, நிதி அறிக்கைகளில் சரிசெய்தல் வேண்டும்.

(vi)	கட்டுமானப் பணிகள் நிறைவடையாத பிபில மற்றும் தணமல்வில பிரதேச செயலக கட்டிடங்கள் இரண்டிற்குமான ரூபா.411,869,721 செலவினத்தை, செயற்படுத்தப்பட்டு வரும் வேலைகள் - 9160 என்ற குறியீட்டின் கீழ் கணக்கில் பதிய வேண்டியிருந்த போதிலும், அதனை கட்டிடங்கள் - 9151 எனும் பிரிவின் கீழ் கணக்கில் பதியப்பட்டதன் காரணமாக, கட்டிடங்களின் பெறுமதி அந்தத் தொகையால் அதிகமாக காண்பிக்கப்பட்டுள்ளது.	புதிய கட்டிடங்கள் நிர்மாணிக்கும் போது, செயற்படுத்தப்பட்டு வரும் வேலைகள் - 9160 என்ற குறியீட்டின் கீழ் கணக்கில் பதிய, எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	எதிர்வரும் ஆண்டுகளில் நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் போது, பாவனைக்கு உதவாத நிலையில் உள்ள, நிறைவு செய்யப்படாத கட்டிடங்களின் பெறுமதியை செயற்படுத்தப்பட்டு வரும் வேலைகள் என்பதன் கீழ் கணக்கில் பதிய வேண்டும்.
(vii)	செலவுப் பேரேட்டுக்கு அமைய, பிபில மற்றும் தணமல்வில பிரதேச செயலக கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஏற்புடையதாக மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ஏற்பட்ட ரூபா.190,478,990 ஆன செலவினத்தில், திறைசேரியினால் அச்சிடப்பட்ட SA 82 இல் ரூபா.36,148,836 ஐ கொள்வனவுகள் பிரிவின் கீழும், எஞ்சிய ரூபா.154,330,154 ஐ ஆரம்ப மீதிச் சரிசெய்தல்கள் பிரிவின் கீழும், பிழையாக இரு இடங்களில் கணக்கில் பதியப்பட்டிருந்தது.	சிஹாஸ் கட்டமைப்பில் உள்ளீடு செய்யும் போது ஏற்பட்ட தாமதம் காரணமாக, கொள்வனவுகளின் கீழ் சேர்க்கப்பட்டிருந்ததுடன், அதனைச் சரிசெய்வதற்காக கொள்வனவுகளை நீக்கி, அந்தப் பெறுமதியை ஆரம்ப மீதியுடன் சேர்க்கப்பட்டுள்ளது.	எதிர்காலத்தில், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ஏற்கப்பட்ட செலவினத்தை அதே ஆண்டில் சரியான கணக்குகளுக்குள், கணக்கில் பதிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(இ) ஏனைய குறைப்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
வெல்லவாய பிரதேச செயலகத்தினால் உமாஓயா திட்டத்துடன் தொடர்புடையதாக, 2015 ஆம் ஆண்டில் ஒரு பயனாளிக்கு ரூபா.850,000 மேலதிகமாக நட்டஈடு வழங்கியமை காரணமாக ஏற்பட்ட நட்டம், நட்ட சேதப் பதிவேட்டில் பதியப்பட்டிருந்த போதிலும், நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பாக ஒரு விசாரணையை மேற்கொண்டு, எதிர்கால நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	நட்டங்களையும் சேதங்களையும் சரியாக நிதி அறிக்கைகளில் காட்ட வேண்டும் என்பதுடன், அவற்றை முறைப்படி நடவடிக்கை எடுத்து அறவிடுதல் வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்காக மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளில் 18 செலவின விடயங்களுக்கு ஏற்புடையதாக ரூபா.76,402,788 மீதமாய் இருந்ததுடன், அது ஒரு சதவீதமாக 10 வீதம் முதல் 52 வீதம் வரையிலான வீச்சுக்குள் இருந்தது.	எதிர்வரும் ஆண்டுகளில், தேவையான ஒதுக்கீட்டு அளவிற்கு மாத்திரம் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஒதுக்கீடுகளின் குறைந்து பயன்பாட்டுக்கு தேவையான நிகழ்ச்சித்திட்டம் தயாரிப்பதும், ஒதுக்கீட்டு மீதங்கள் குறைவடையும் வகையில் வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதும் மேற்கொள்ளுதல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 2104 கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்கள் எனும் செலவின விடயத்திற்காக ரூ.250,000,000 ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதிலும், திசெம்பர் 31 ஆம் திகதியன்று ஒதுக்கீட்டு மீதி நிகர ஒதுக்கீட்டில் 24 சதவீதமாக, அதாவது ரூபா.59,521,009 ஆகக் காணப்பட்டது. பிபில மற்றும் தணமல்வில பிரதேச செயலகக் கட்டிடங்களின் கட்டுமானங்களுக்காக இந்த ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் கட்டுமானங்களை மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிலும் நிறைவு செய்ய முடியவில்லை. முறையான முகாமைத்துவத்துடனும் வினைத்திறனுடனும் கட்டிட நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்வதற்கு பயன்படுத்தாமை காரணமாகவே ஒதுக்கீடுகள் மீதமாகியிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது.	2025 ஆம் ஆண்டுக்காக தொடர்ந்து செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் 2025 ஆம் ஆண்டிற்குள் இந்தக் பணியை நிறைவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்கேற்ப, கட்டிட நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்வதற்காக வினைத்திறனுடன் பயன்படுத்தாமை தொடர்பில் பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு முறையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

3.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படுதல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதி அறிக்கைகளில் இணைப்பு (iv) இன் கீழ் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொறுப்புகள் பற்றிய கூற்றில் (i) இன் கீழ், நிதி பிரமாணக் குறிப்பு 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் அனைத்து உடன்படிக்கைகளையும் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், மொனராகலை மாவட்டச் செயலகத்தின் பொறுப்புகள் பதிவேட்டில் சேர்க்கப்பட்டிருந்த 03 செலவின விடயங்களுக்குரிய ரூபா.549,133 பெறுமதியான பொறுப்புகள் நிதி அறிக்கைகளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்கால ஆண்டுகளில் நிதி அறிக்கைகளில் பொறுப்புகளை சரியாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது, அந்த ஆண்டுக்குரிய அனைத்துப் பொறுப்புகளும் நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், ஒரு உள்ளக வேலைத்திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

3.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) வெல்லவாய பிரதேச செயலகத்தினால் உமாஓயா அபிவிருத்தித் திட்டத்திற்காக காணி சுவீகரிப்பு மற்றும் நட்டஈடு கொடுப்பனவுகளுடன் தொடர்புடையதாக, பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.		
(i) 552 காணித் துண்டுகளுக்காக ரூபா.477,309,806 நட்டஈட்டுப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டத்திற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் 12 ஆண்டுகள் தாமதமானதால், 243 காணித் துண்டுகளுக்குப் பதிலாக ரூபா.33,518,353 மேலதிக வட்டிப் பணத்தைச் செலுத்த நேரிட்டுள்ளது.	காணி சுவீகரிப்பு செயன்முறையுடன் பல்வேறு நிறுவனங்கள் தொடர்புபடுவதால் நட்டஈடு செலுத்தும் செயன்முறைக்கு அதிக காலப்பகுதி எடுத்துள்ளது. எதிர்கால நட்டஈடு கொடுப்பனவு நடவடிக்கைகளின் போது, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவித்து உடனடியாக இந்த வேலையை முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.	இது சம்பந்தமாக முறையான விசாரணையை மேற்கொண்டு, உத்தியோகத்தர்களின் வினைத்திறனின்மை காரணமாக இது இடம்பெற்றிருந்தால், அந்த உத்தியோகத்தர்கள் மீது முறைப்படி நடவடிக்கை எடுப்பதும், காணி சுவீகரிப்புச் செயன்முறையை வினைத்திறனாக்கி மேலதிக வட்டிப் பணம் செலுத்துவதை நிறுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ii)	04 காணித் துண்டுகளுக்கான நட்டஈட்டைக் கோரும்போது, காணி உரிமையாளர்களால் பழைய உறுதிப்பத்திரங்களும் இருமடித்தாள்களும் வழங்கப்பட்டதன் காரணமாக, சொந்த உரித்துக்குரிய பெறுமதிகள் மதிப்பிடப்பட்டிருந்தது. நில-அளவையாளர் அறிக்கைகளி-ன்படி அவை அரச காணிகள் என உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர், ரூபா.11,710,500 ஆக இருந்த ஆரம்ப நட்டஈட்டுப் பணம், அபிவிருத்தி பெறுமதி வரை குறைந்த பெறுமதிக்கு மதிப்பிடப்பட்டதன் காரணமாக, நட்டஈடு கொடுப்பனவாக கிடைத்த அந்தப் பணம் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்த-ர்களால் அந்தக் காணியின் உரித்தை சரியாக உறுதிப்படுத்-திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக நட்டஈடு செலுத்தும் நடவடிக்கைகள் மேலும் தாமதமடைந்திருந்தன.	நட்டஈட்டுப் பணம் செலுத்துவதற்கு முன்னர், அந்தக் காணிகள் அரசாங்க காணிகள் என்பதை உறுதிப்படுத்தப்பட்டதன் காரணமாக, நட்டஈடு செலுத்துவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அந்தப் பிழையைச் சரிசெய்யும் போது, முந்தைய மதிப்பீட்டுப் பெறுமதி ஒரு அபிவிருத்தி மதிப்பீட்டுப் பெறுமதியாக வழங்கப்பட்டு-ள்ளது. காணி உரிமை-யாளர்களுக்கு கிடைக்கும் நட்டஈட்டுப் பணம் குறைவடைந்ததனால், காணி உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக காணி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், அத்தீர்மானம் கிடைக்கும் வரை மதிப்பீட்டுப் பணம் வைப்புக் கணக்கில் வைத்திருக்கப்படுவதாக அறியப்படுகிறது.	விரைவான வேலைத்திட்டமொன்றின் மூலம் சரியாக உறுதிப்படுத்திக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு நட்டஈடு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(iii)	ஹந்தபனாகல நீர்த்தேக்கத்தை அபிவிருத்தி செய்வதற்காக சுவீகரிக்கப்பட்ட காணித் துண்டொன்றில் அமைந்திருந்த வீட்டினை அகற்றிக் கொள்ளாத காரணத்தினால், ரூபா.1,474,975 ஆனது 2024 பெப்ரவரி 08 ஆம் திகதி முதல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.	வீட்டை உடைத்து அகற்றுவதற்காக மதிப்பிடப்பட்ட பணத்தில் ஆரம்பத்தில் 75% செலுத்தப்பட்டுள்ளதுடன், வீட்டு உரிமையாளர் இந்த வீட்டை உடைத்து அகற்றுவதை தாமதிப்பதால், மீதி 25% பணம் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. வீட்டு உரிமையாளர் மீது உடைமையை பெற்றுக்கொள்ளும் சட்டத்தின் கீழ் அகற்றல் அறிவிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுப்பதற்கு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.	விரைவான வேலைத்திட்டமொன்றை வகுத்து, நட்டஈட்டுப் பணத்தில் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைவதற்காகப் பயன்படுத்தி, திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

(iv)	காணி சுவீகரிப்பு பணிகள் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு, நட்டஈடு செலுத்தப்பட வேண்டிய 705 காணித் துண்டுகள் அடையாளம் காணப்பட்டிருந்த-போதிலும், 2025 மார்ச் 21 ஆம் திகதி வரையிலும் 95 காணித் துண்டுகளுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டிருக்கவில்லை.	மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் ஏனைய சிக்கல்களைத் தீர்த்து வைத்ததன் பின்னர், நட்டஈட்டுப் பணத்தைச் செலுத்தி நிறைவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக அறியப்படுகிறது	முறையான விசாரணையொன்றை மேற்கொண்டு, நட்டஈடு செலுத்தப்பட வேண்டிய காணித் துண்டுகளுக்கு உடனடியாக நட்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப-படுதல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் செப்தெம்பர் 30 ஆம் திகதியன்று, 04 பிரதேச செயலகங்களுக்கு சொந்தமான 33 கிராம சக்திச் சங்கங்களில் ரூபா. 27,232,480 ஆனது 2018 ஆம் ஆண்டிலிருந்து பாவனைக்கு உதவாமல் செயலிழந்து காணப்பட்டது.	புத்தளை – செயலில் உள்ள கிராம சக்திச் சங்கங்களின் இணக்கப்பாட்-டுடன் அடையாளம் காணப்பட்டுள்ள சமூக அபிவிருத்தித் தேவைகளை 2025 ஆம் ஆண்டிற்குள் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். மடுல்ல - நிதியினை அரசாங்கத்திடம் கையளிக-குமாறு எழுத்து மூலம் அறிவித்த 03 சங்கங்களுக்கு ஏற்புடையதாக ரூபா.1,511,077 அரசாங்கத்திடம் பொறுப்பேற்பதற்கான அனுமதி பெறுவதற்காக சௌபாக்யா அபிவிருத்திப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 04 சங்கங்கள் செயலில் இயங்குகின்றனவா இல்லையா என்பது வலயப் பொறுப்புப் பொருளாதார உத்தியோகத்தர்களிடம் வினவப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. படல்கும்புர – 03 சங்கங்களில் நுண்நிதிக் கடன் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதுடன், எஞ்சிய 09 சங்கங்களுக்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	செயலற்ற சங்கங்களைச் செயற்பாட்டிற்குரிய நிலைக்கு கொண்டுவரவோ அல்லது முறைப்படி நடவடிக்கை எடுத்து அரசாங்கத்தின் வருமானத்தில் வரவு வைக்கவோ நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

		வெல்லவாய – ஒரு சங்கத்தின் பணம் மீளப்பெறப்பட்டு, மாவட்டச் செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதுடன், எஞ்சிய இரண்டு சங்கங்களிடமிருந்து மீளப்பெறப்பட வேண்டிய ரூபா.3,011,381 பணத்தை உடனடியாக மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறியப்படுகிறது.	
(இ)	படல்கும்புறை, மடுல்லை மற்றும் புத்தளை பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஓய்வூதியம் பெறும் 22 பயனாளிகளுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா.2,642,756 ஓய்வூதியப் பணம் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.	மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணம் மாதாந்தம் அறவிடப்பட்டு வருகின்றது.	மேலதிக கொடுப்பனவு தொடர்பில் முறையான விசாரணையொன்றை மேற்கொள்வதற்கும், மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ஓய்வூதியத்தை சுற்றுநிருபத்தின் பிரகாரம் அறவிடுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஈ)	அஸ்வெசும பயனாளிகள் 05 பேர் இறந்த பின்னரும் சலுகைக் கொடுப்பனவுகளை நிறுத்துவது 03 மாதம் முதல் 16 மாதங்கள் வரை தாமதமானதன் காரணமாக, படல்கும்புறை பிரதேச செயலகத்தினால் (ரூபா.198,000 பணம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.	2024 ஒக்டோபர் மாதத்திற்குப் பின்னர், பிரிவுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களால் இறந்த நபர்கள் தொடர்பான தகவல்கள் முறையாகப் பதிவு செய்யப்படுவதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	விசாரணை நடாத்தப்பட்டு முறையான வகையில் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தலும், மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த அஸ்வெசும நலன்களை மீண்டும் அறவிடுதலும் வேண்டும்.
(உ)	மகளிர் பணியகத்தின் சுழல் கடன் திட்டத்தின் கீழ், படல்கும்புறை, மடுல்லை மற்றும் வெல்லவாய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 436 பயனாளிகளிடமிருந்து மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா.2,422,218 அறவிடப்பட வேண்டியிருந்தது.	படல்கும்புறை – அறவிடுவதற்காக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மடுல்ல – கடன்தொகை தவணையாக அறவிடப்படுகிறது. வெல்லவாய – கடன் செலுத்தலை துரிதப்படுத்தமாறு அறிவுறுத்தப்படுவதாக அறியப்படுகிறது.	காலக்கிரமப்படி கடனை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுப்பதற்கும், நிலுவைக் கடன் மிகுதிகளை மீள அறவிடுவதை வினைத்திறனாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மொனராகலை மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறையொன்றை தயாரித்து பேணி வருகின்றது என்று கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன், அந்த முறையின் வினைத்திறன் குறித்து காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு, அதற்கமைய முறைமை வினைத்திறனாக முன்னெடுப்பதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும். மேலும் அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டுமாயினும், அத்தகைய மீளாய்வுகள் செய்யப்பட்டதாக உறுதிப்படுத்தும் கூற்றுக்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	எதிர்காலத்தில் இந்த அறிக்கைகளின் பிரதிகளை (கணக்காய்வுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	கணக்காய்வாளர் நாயகத்திற்கு தேவையான வகையில், குறிப்பிட்ட காலப்பகுதிகளுக்குள் அனைத்துக் கணக்காய்வு வினவல்களுக்கும் பதிலளிப்பது இடம்பெறும் என்று கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டுமாயினும், அறிக்கையின் 4.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு வினவல்களுக்குப் பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு வினவல்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	அவதானிப்புக்கள்		கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
		பெறுமதி ரூபா	இணங்காமை		
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு.	-	2025 சனவரி 30 ஆம் திகதி நிலவரப்படி, ஒப்பந்தக் காலம் முடிவடை-ந்திருந்த 7 அரச உத்தியோகத்தர் குடியிரு-ப்புகள் மாவட்டச் செயலகத்திடம் மீண்டும் கையளிக்கப்படாமையின் காரணமாக, 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை காத்திருப்புப் பட்டியலில் இருந்த தகுதியுடைய விண்ணப்ப-தாரர்களுக்கு அரச குடியிருப்பு ஒன்றைப் பெற முடியாமல் போயிருந்தது.	சேவைத் தேவைகளின் அடிப்படையில் 5 வீடுகளுக்கான காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது டன், 2 வீடுகளை மீண்டும் ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்ட உத்தியொகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	விதிமுறைகளின் படி செயற்படாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தலும், ஒப்பந்தக் காலம் முடிவடைந்த வீடுகளைப் பொறுப்பேற்று காத்திருப்புப் பட்டியலின்படி விண்ணப்பதாரர்களுக்கு அவற்றை வழங்குதலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்..
(ஆ)	இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை				
(i)	நிதிப் பிரமாணம் 94(2)	989,327	மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் திசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி, 4 செலவுத் தலைப்புகளில் ஒதுக்கீட்டு மீதிகளை தாண்டி கடன் நிலைக்கு சென்றிருந்தது.	எதிர்காலத்தில் செலவுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	எதிர்காலத்தில் வருடாந்த மதிப்பீடுகளை வெவ்வேறான ஒதுக்கீட்டு எல்லைக்குள் பொறுப்புகள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ii)	நிதிப் பிரமாணம் 104(3)	-	இரண்டு டிராக்டர் வண்டிகளின் இரண்டு மின்கலங்கள் (பேட்டரிகள்) 2023 செப்தெம்பர் 01 ஆம் திகதி காணாமல் போயிருந்தன. ஒரு விசாரணை சபை நியமிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் தினமான 2025 மார்ச் 17 ஆம் திகதி வரை விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படவில்லை. மேலும், 2023 ஆகஸ்ட் 23 ஆம் திகதி ஒரு வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்துத் தொடர்பில் 2023 ஒக்டோபர் 30 ஆம் திகதி ஒரு விசாரணை சபை நியமிக்கப்பட்டிருந்த போதிலும், 2025 சனவரி 30 ஆம் திகதி வரையில் விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.	விசாரணை சபையிடம் நினைவூட்டல் கடிதங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்	விசாரணை நடவடிக்கை களை விரைவாக நிறைவு செய்து அறிக்கைகளைப் பெற்று, அடுத்த கட்ட நடவடிக்கை களை மேற்கொண்டு நிறைவு செய்தல் வேண்டும்.
(iii)	நிதிப் பிரமாணம் 104 (4)	-	மாவட்டச் செயலகத்தில் 2016 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை அறிக்கையிடப்பட்ட 5 வாகன விபத்துக்கள் தொடர்பாகவும், வெல்லவாய பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான 2020 நவம்பர் மாதம் 11 ஆம் திகதி விபத்துக்குள்ளான கெப் வண்டி தொடர்பாகவும், மின்னல் தாக்கியதன் காரணமாக 2023 ஒக்டோபர் 17 ஆம் திகதி மொனராகலை பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ அறைக்கு சேதம் ஏற்பட்டமை தொடர்பாகவும், 2025 சனவரி 30 ஆம் திகதி வரையில் விசாரணை நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படவில்லை.	3 வாகனங்க-ளுக்காக எதிர்காலத்தில் ஒரு குழுவை நியமித்து அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்க-ப்படுகிறது. 2 வாகனங்க-ளுக்கான அறிக்கையை விரைவாக வழங்குமாறு நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்-டுள்ளுது. மேலும் விசாரணை குழுவிற்கு நினைவூட்டல் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு	விசாரணை நடவடிக்கை களை விரைவாக நிறைவு செய்து அறிக்கைகளைப் பெற்று, அடுத்த கட்ட நடவடிக்கை களை மேற்கொண்டு நிறைவு செய்தல் வேண்டும்.

					வருதல்
(iv)	நிதிப் பிரமாணம் 128 (1) (உ)	-	2023 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக மொனராகலை பிரதேச செயலகத்தின் பொருட்களின் ஆய்வு அறிக்கை மூலம், பிரதேச செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் 13 வகைப் பொருட்களைச் சேர்ந்த 28 அலகுகளும், பிரதேச செயலகத்தில் 2 வகைப் பொருட்களைச் சேர்ந்த 31 அலகுகளும் குறைபாடாக உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன், பொருட்கள் காணாமல் போனமை தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரைக் கண்டறிந்து பெறுமதியை அறவிடவும், குறைபாட்டிற்குப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பிரதேச செயலாளர் ஒருவர் உத்தியோகபூர்வ குடியிருப்பு மற்றும் பொருட்களை முறையான கையளிப்பு இல்லாமல், சாவியை மட்டும் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். குறைபாடுள்ள பொருட்கள் குறித்து அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவர் அதற்குப் பதிலளிக்க-வில்லை.	முறையான வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு பொருட் குறைபாடுகளுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரைக் கண்டறிந்து, ஏற்பட்டுள்ள இழப்பை அறவிடுதல் வேண்டும்.
(இ)	காணி ஆணையாளர் நாயகத்தின் 2020 மே 20 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 2020/6 சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தி	25,680,769	வருடாந்த குத்தகை பணத்தை காலாண்டு அடிப்படையில் அறவிட வேண்டியிருந்தும், 3 நீண்ட கால குத்தகைப் பத்திரங்கள் தொடர்பாக புத்தள பிரதேச செயலகத்தால் அந்தப் பரிந்துரையின்படி செயற்படப்படவில்லை என்பதுடன், 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதி நிலவரப்படி குத்தகை வருமானம் நிலுவையாகக் காணப்பட்டது.	இரண்டு குத்தகைதாரர்கள் நிலுவையிலுள்ள குத்தகைப் பணத்தைச் செலுத்துவதற்கு காணி ஆணையாளர் நாயகத்திடம் இருந்து கால அவகாசம் கோரியுள்ளனர். ஒரு குத்தகைதாரர் இறந்துவிட்டதால், நிலுவையிலுள்ள குத்தகைப் பணத்தை பதிவழிக்குமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.	சரியான நேரத்தில் நிலுவையிலுள்ள குத்தகைப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும், அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை உடனடியாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

3.6 வைப்பு மீதிகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	படல்கும்புர நீர் வழங்கல் திட்டத்தின் அலுபொத நிலத்தடி நீர்த் தடாகத்தைக் கட்டுவதற்காக ஒரு காணித் துண்டை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிடம் சுவிகரிப்பதற்கு 2020 திசெம்பர் 11 ஆம் திகதி ரூபா 200,000 படல்கும்புர பிரதேச செயலகத்தில் வைப்பிலிடப்பட்டிருந்தது. கணக்காய்வு தினமான 2024 திசெம்பர் 18 ஆம் திகதி வரையில், குறித்த நிதி வைப்பிலிடப்பட்டு ஏறத்தாழ 4 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், காணியை கையளிக்கும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படவில்லை.	ரூபா 16,200 நிதி அளவீட்டுக் கட்டணமாகச் செலவிடப்பட்டுள்ளது. ரூபா 183,800 நிதி பொது வைப்பு நிதிக் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன், மிகுதிப் பணத்தை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	காணியை கையளிப்பதை விரைவுபடுத்தி, வைப்பிலிடப்பட்ட பணத்தை தீர்வு செய்தல் வேண்டும்.
(ஆ)	மின்சாரம் வழங்குவதன் தரத்தை மேம்படுத்தும் உப திட்டம் (SESRIP – Package 04) இன் கீழ் முன்மொழியப்பட்ட வெல்லவாய 33 வோல்ட் உயர் அழுத்த மின் விநியோக நிலையத்தை அமைப்பதற்காக காணியைக் கையகப்படுத்துவதற்கு கிடைத்திருந்த ரூபா 700,000 நிதி, 2019 ஆகஸ்ட் 29 ஆம் திகதி முதல் வெல்லவாய பிரதேச செயலகத்தின் வைப்பு நிதிக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், காணியைக் கையகப்படுத்தும் பணி தாமதமானதன் காரணமாக திட்டம் தாமதமடைந்திருந்தது.	காணியைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மிகுதிப் பணத்தை மின்சார சபைக்கு அனுப்புவதற்காக காணி அமைச்சிடம் அனுப்பி வைத்தல்.	முறையான விசாரணையை மேற்-கொண்டு, தாமதத்-திற்கான காரணங்களைக் கண்டறிதல் வேண்டும். அதற்கேற்ப நடவடிக்-கைகளை மேற்கொண்டு காணியைக் கையகப்-படுத்தும் செயல்-முறையை வினைத்-திறனாக்கி, திட்டத்தை நடைமுறைப்படுத்து-வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	கொளபொரையில் நீர் சுத்திகரிப்பு நிலையமொன்றை அமைப்பதற்காக ஒரு காணித் துண்டை சுவிகரிப்பதற்கான செலவுகளுக்காக, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் 2021 பெப்ரவரி 05 ஆம் திகதி வெல்லவாய பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 180,617 நிதி, குறித்த பணி நிறைவேற்றப்படாததன் காரணமாக 4 வருடங்களுக்கும் மேலாக வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.	06 ஆம் பிரிவின் கீழ் ஆரம்ப வரைபடத்தைத் தயாரிப்பதற்காக அளவீட்டுக் கட்டணமாக ரூபா 53,808/- தொகை நில அளவையாளர் நாயகத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், திட்டத்தின் மேலதிக நடவடிக்கைகள் நடைபெற்று வருதல்.	முறையான விசாரணையை மேற்-கொண்டு, தாமதத்-திற்கான காரணங்களைக் கண்டறிதல் வேண்டும். அதற்கேற்ப நடவடிக்-கைகளை மேற்கொண்டு காணியைக் கையகப்-படுத்தும் செயல்-முறையை வினைத்-திறனாக்கி, திட்டத்தை நடைமுறைப்படுத்து-வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மடுல்ல பிரதேச செயலகப் பிரிவில், வெள்ளப்பெருக்கு, மண்சரிவு மற்றும் மண்சரிவு அதி அபாயமுள்ளவர்களை மீள்குடியேற்றுவதன் கீழ் காணி கொள்வனவு செய்து, வீடொன்று அமைப்பதற்காக 2021 ஆம் ஆண்டில் ஒரு பயனாளியொருவருக்கு ரூபா 1,300,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தினமான 2024 நவம்பர் 08 ஆம் திகதி வரையில் பயனாளி வீட்டை அமைத்திருக்கவில்லை.	பயனாளிக்கு செலுத்தப்பட்ட ரூபா 1,300,000 தொகை சட்ட ரீதியான வழிகளில் மீண்டும் அறவிடுவது குறித்து ஆலோசனை கோரி சட்டமா அதிபருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.	முறையான பின் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு, வீட்டை அமைப்பதற்கு அல்லது அமைக்கும் பணிகளை மேற்கொள்ள தவறினால், செலுத்தப்பட்ட தொகையை திரும்பி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

4.2 வருடாந்த செயற்றிறன் அறிக்கை

2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 47(4) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த செயற்றிறன் அறிக்கையானது நிதி வருடம் முடிவடைந்து 180 நாட்களுக்குள் அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்பட வேண்டும். 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 2/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயற்றிறன் அறிக்கை தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்தச் செயற்றிறன் அறிக்கை வருடாந்த நிதி அறிக்கைகளுடன் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கமைய, சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயற்றிறன் அறிக்கையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் செயற்றிறன் விஷேட சுட்டிகள் 7 இன் கீழ் நூற்றுக்கு நூறு என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அனர்த்தங்கள் குறைப்பு திட்டமாக 2024 மே 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த புவக்குபிட்டிய குளத்தை புனரமைக்கும் திட்டம் 2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிறைவு செய்யப்படவில்லை. 2025 பெப்ரவரி மாத முன்னேற்ற அறிக்கையின்படி,	எதிர்காலத்தில் செயற்றிறன் சுட்டிகளைத் தயாரிக்கும் போது சரியான தரவுகளின் அடிப்படையில் சுட்டிகளைத் தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட அலகுகளை அறிவுறுத்தப்பட்டுள்ளது.	செயற்றிறனை அறிக்கை செய்யும் போது பிழையான தகவல்களை உள்ளடக்கி கொடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதும், செயற்றிறன் அறிக்கையைச் சரியானதும் உண்மையானதுமான தகவல்-

	திட்டத்தின் நிதி முன்னேற்றம் 0.25% ஆகவும், பௌதீக முன்னேற்றம் 25% ஆகவும் காணப்பட்டது.		களை உள்ளடக்கி தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	வருடாந்தச் செயற்றிறன் அறிக்கையில், விதாத்தா அபிவிருத்தி நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதற்காக அமைக்கப்பட்டிருந்த 10 விஷேட சுட்டிகளின் செயற்றிறன் மட்டம் நூற்றுக்கு நூறு என குறிப்பிடப்பட்டிருந்தது. விதாத்தா அபிவிருத்திப் பிரிவின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையின்படி, தொழில்முனைவோர் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றப் பயிற்சி திட்டங்கள், விஷேட திட்டங்களை நடைமுறைப்படுத்தல், தொழில்நுட்ப உதவிச் சேவைத் திட்டங்கள் மற்றும் கிராமப்புற உற்பத்திகளுக்கான தரப் பரிசோதனை அறிக்கைகள் மற்றும் தரச் சான்றிதழ்கள் வழங்குதல் ஆகிய பொறுப்புகள் தொடர்பான துறைகளில் வருடாந்த இலக்குகளை அடைவதற்கான முன்னேற்றம் முறையே 67%, 43%, 86% மற்றும் 38% ஆகக் காணப்பட்டது.	எதிர்காலத்தில் செயற்றிறன் சுட்டிகளைத் தயாரிக்கும் போது சரியான தரவுகளின் அடிப்படையில் சுட்டிகளைத் தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட அலகுகளை அறிவுறுத்தப்பட்டுள்ளது.	அறிக்கை செய்யும் போது பிழையான தகவல்களை உள்ளடக்கி கொடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதும், செயற்றிறன் அறிக்கையைச் சரியானதும் உண்மையானதுமான தகவல்களை உள்ளடக்கி தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	வருடாந்தச் செயற்றிறன் அறிக்கையில், அனர்த்த நிவாரண சேவைகள் நடவடிக்கைகளின் செயற்றிறன் மதிப்பீட்டின் கீழ், பாதுகாப்பின்மையைக் குறைத்தல் எனும் சுட்டியின் செயற்றிறன் நூற்றுக்கு நூறு எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அனர்த்த நிவாரண சேவைப் பிரிவின் வருடாந்த முன்னேற்ற அறிக்கையின்படி அத்தகைய செயற்பாடுகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் செயற்றிறன் சுட்டிகளைத் தயாரிக்கும் போது சரியான தரவுகளின் அடிப்படையில் சுட்டிகளைத் தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட அலகுகளை அறிவுறுத்தப்பட்டுள்ளது.	அறிக்கை செய்யும் போது பிழையான தகவல்களை உள்ளடக்கி கொடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதும், செயற்றிறன் அறிக்கையைச் சரியானதும் உண்மையானதுமான தகவல்களை உள்ளடக்கி தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	அனர்த்த நிவாரண சேவைகள் பிரிவின் மீள்குடியேற்றத்திற்கான சுட்டியின் செயற்றிறன் நூற்றுக்கு நூறு என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அப்பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின்படி, வருடத்தின்போது பெறப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை விநியோகித்த நிதி முன்னேற்றம் தவிர, பௌதீக முன்னேற்றம் மதிப்பீடு செய்யப்படவில்லை. மடுல்ல பிரதேச செயலகத்தில்	எதிர்காலத்தில் செயற்றிறன் சுட்டிகளைத் தயாரிக்கும் போது சரியான தரவுகளின் அடிப்படையில் சுட்டிகளைத் தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட அலகுகளை அறிவுறுத்தப்பட்டுள்ளது.	அறிக்கை செய்யும் போது பிழையான தகவல்களை உள்ளடக்கி கொடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதும், செயற்றிறன் அறிக்கையைச் சரியானதும் உண்மையானதுமான தகவல்களை உள்ளடக்கி

மீள்குடியேற்றங்களுக்காக நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்ட இரண்டு பயனாளிகளின் வீடமைப்பு நிர்மாணப் பணிகள் நிறைவடையாத நிலையில், செயற்றிறன் நூற்றுக்கு நூறு எனக் காட்டுவது சரியானது அல்ல என அவதானிக்கப்பட்டது.		தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 கொள்வனவுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி கொள்வனவு செய்யும் போது கொள்முதல் நடைமுறையைப் பின்பற்றாமை, பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் அரிசியின் சந்தை விலையை ஆய்வு செய்து அரிசியைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்காமை, நிதிப் பிரமாணம் 156 (7) இன் பிரகாரம் அரசாங்கத்துக்குச் சாதகமான வகையில் செயற்படாமை, நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2024 ஏப்ரல் 04 ஆம் திகதியிடப்பட்ட இல. DFD/2024-01 சுற்றறிக்கையின் 3.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்கத்தின் செலவுகள் குறையும் வகையில் செயற்படாமை, 2024 ஏப்ரல் 10 மற்றும் 2024 யூன் 10 ஆம் திகதியிடப்பட்ட ஒதுக்கீடுகளை அங்கீகரிக்கும் கடிதங்களின் இலக்கம் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவுகளை மேற்கொள்ளும் போது அரசாங்கத்தின் சட்டங்கள் மற்றும் விதிகளின்படி செயற்படாமை ஆகிய காரணங்களால் மொனராகலை மாவட்டத்தில் அரிசி கொள்வனவு செய்யும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியதில் அரசாங்கத்திற்கு ரூபா 36,649,480 இழப்பு ஏற்பட்டிருந்தது.	நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் மூலம் அரிசி கொள்வனவு செய்வதற்கான உத்தரவாத விலை தீர்மானிக்கப்பட்டுள்ளது.	முறையான விசாரணையை மேற்கொள்ளுதல் மற்றும் நிதி துஷ்பிரயோகம் அல்லது ஊழல் இடம்பெற்றுள்ளது எனக் கண்டறியப்பட்டால், சட்டத்தை அமுலாக்கும் நிறுவனமொன்றிடம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	நிதிப் பிரமாணம் 156 (7) இன் பிரகாரம் அரசாங்கத்திற்கு சாதகமான வகையில் செயற்படாமையினாலும், நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2024 ஏப்ரல் 04 ஆம் திகதியிடப்பட்ட	குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குத் தேவையான முழுமையான அரிசியை ஒரே வகையாக வழங்குவதற்குப் போதுமான அரிசி இருப்பு இல்லாத	முறையான விசாரணையை மேற்கொள்ளுதல் மற்றும் நிதி துஷ்பிரயோகம் அல்லது ஊழல் இடம்பெற்றுள்ளது எனக் கண்டறியப்பட்டால்,

	இலக்கம் DFD/2024-01 கொண்ட சுற்றறிக்கையின் 3.6 ஆம் பந்தியின்படி அரசாங்கத்தின் செலவுகள் குறையும் வகையில் குறைந்த விலை கொண்ட சிவப்பு அரிசியை (ரத்து கெக்குளு) கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்காமல், அதிக விலை கொண்ட வெள்ளை அரிசியை (வெள்ளை கெக்குளு) கொள்வனவு செய்தமையினாலும் மெதகம மற்றும் சியம்பலாண்டுவ பிரதேச செயலகங்கள் மொத்தமாக அரசாங்கத்திற்கு ரூபா 957,870 இழப்பை ஏற்படுத்தியிருந்தன.	காரணத்தினால் இரண்டு வகைகளிலுமே அரிசி வழங்க வேண்டியேற்பட்ட-துடன், இரண்டாவது கட்டத்தில் வழங்குநர்களிடம் சிவப்பு அரிசி இல்லாததாலேயே வெள்ளை அரிசியைப் பெற்றுக்கொள்ள வேண்டியேற்பட்டது.	சட்டத்தை அமுலாக்கும் நிறுவனமொன்றிடம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

4.4 சொத்துக்கள் முகாமைத்தவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மொனராகலை மாவட்டச் செயலகத்தின் 2023 ஆம் ஆண்டு பொருட் மீளாய்வின்போது, களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த 60 பித்தளை நீர் குழாய்கள் (Brass Taps) சரக்குகள் (Inventory) பட்டியலில் உள்ளடக்கப்பட்டு இருந்தபோதிலும், அவை யாரிடமிருந்து பெறப்பட்டன அல்லது எந்த வேலைக்காக கொள்வனவு செய்யப்பட்டன என்பது குறித்தும் அவற்றின் பெறுமதி குறித்தும் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.	மாவட்டச் செயலகத்தி-லிருந்து கொள்வனவு செய்யப்பட்டது என்பதற்கான தகவல் எதுவும் பெற்றுக்கொள்ள முடியாமலிருந்ததுடன், அவை நீண்டகாலமாக களஞ்சியத்தில் காணப்பட்டன. 2023 ஆம் ஆண்டு பொருட் மீளாய்வு சபையின் (Goods Inspection Board) அவதானிப்புக்கு உட்பட்டதால், சம்பந்தப்பட்ட பொருட்கள் இருப்புப் புத்தகத்தில் (Stock Book) உள்ளடக்கப்பட்டுள்ளன.	களஞ்சியத்தில் உள்ள பொருட்கள் சம்பந்தமான சரியான தகவல்களைப் பதிவு செய்து பேணி வர வேண்டும் என்பதுடன், நீர் குழாய்களை (Taps) பயனுள்ள பணிக்கு பயன்படுத்தல் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	உலக உணவுத் திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஜீப் வண்டியொன்று, நிதியியல் அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருந்த போதிலும், மாவட்டச் செயலகத்திற்குப் பொறுப்பேற்கப்படவில்லை.	உலக உணவு நிகழ்ச்சி திட்டத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட வாகனங்களை பொறுப்பேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அத்துடன் MTA 6 மற்றும் MTA 8 படிவங்களும் (Forms) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	மாவட்டச் செயலகத்-தினால் பயன்படுத்தப்படும் சொத்துக்களின் உரிமையை பொறுப்பேற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 இழப்புகள் மற்றும் சேதங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வெல்லவாய பிரதேச செயலகத்தினால் உமாஓயா திட்டத்துடன் தொடர்புடையதாக 2015 ஆம் ஆண்டில் ஒரு பயனாளியொருவருக்கு ரூபா 850,000 மேலதிகமாகச் செலுத்தியதால் ஏற்பட்டிருந்த இழப்பு, செவனகல பிரதேச செயலகத்தின் மூலம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரிசி விநியோகிக்கும் வேலைத்திட்டத்தின் போது ஏற்பட்டிருந்த ரூபா 68,008 இழப்பு மற்றும் 2023 ஆம் ஆண்டில் மொனராகலை இலக்கம் 2 கொண்ட சுற்றுலா பங்களாவை திருடர்களால் உடைக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்டிருந்த ரூபா 54,519 இழப்பு ஆகியவை நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	வெல்லவாய - 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சம்பவமொன்றுடன் இது தொடர்பானதாக அமைவதால், இது குறித்து ஒரு விசாரணையை மேற்கொண்டதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். செவனகல – எதிர் வரும் ஆண்டில் நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் போது இந்த நட்டத்தை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சுற்றுலா பங்களா – அரசாங்க நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிலிருந்து விசாரித்து நிதி அறிக்கைகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அனைத்து இழப்புகளையும் சேதங்களையும் நிதி அறிக்கைகளில் உள்ளடக்காதது குறித்துப் பரிசோதனை செய்வதற்கும், அனைத்து இழப்புகளையும் சேதங்களையும் நிதி அறிக்கைகளில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதற்கும் செயலாற்றுதல் வேண்டும்.
(ஆ)	அபாயத்திற்கு உள்ளான 2 வாகனங்கள் தொடர்பாக ஆரம்ப அறிக்கைகளின்படி அடையாளம் காணப்பட்டிருந்த ரூபா 208,524 நட்டமானது, நிதி அறிக்கைகளில் இழப்புகள் மற்றும் கைவிடல்கள் பற்றிய அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை.	இந்த 2 வாகன விபத்துகளுடன் தொடர்புடைய நட்டங்கள் 2024 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்படுவது தவறுதலாக விடப்பட்டுள்ளதுடன், அடுத்த வருடத்தின் நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் போது உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	அனைத்து இழப்புகளையும் சேதங்களையும் நிதி அறிக்கைகளில் உள்ளடக்காதது குறித்துப் பரிசோதனை செய்வதற்கும், அனைத்து இழப்புகளையும் சேதங்களையும் நிதி அறிக்கைகளில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதற்கும் செயலாற்றுதல் வேண்டும்.

4.6 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

மொனராகலை மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்ட 3 கணக்காய்வு வினவல்களுக்கு 2025 மே 23 ஆம் திகதி வரையில் பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

4.7 முகாமைத்துவ குறைப்பாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மொனராகலை மாவட்டச் செயலகத்தினால் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மதிப்பீட்டு அறிக்கையின்படி, அரசாங்க வீடுகளுக்கான மதிப்பீட்டு குத்தகை அறவிடப்படாமையினால், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி, 18 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 291,900 தொகை, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் ஓய்வுபெறுதல் மற்றும் இடமாற்றம் பெற்றுச் செல்லுதல் ஆகிய காரணங்களால் முறையாக அறவிடப்படுவதில்லை என அவதானிக்கப்பட்டது.	2025 மார்ச் 18 ஆம் திகதி நிலவரப்படி ரூபா 26,663 தொகை அரசாங்கத்திற்கு அறவிடப்பட்டுள்ளது.	முறையான வகையில் செயற்பட்டு, குறித்த காலப்பகுதியில் சரியான வீட்டு குத்தகையை அறவிடாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும், நிலுவையில் உள்ள வீட்டுக் குத்தகை தொகையை விரைவாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மொனராகலை மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான ஆண் மற்றும் பெண் உத்தியோகத்தர்களுக்கான விருந்தினர் இல்லங்கள் மற்றும் 2 உத்தியோகபூர்வ உறைவிடங்கள் (Official Quarters) ஆகியவற்றிலிருந்து 2024 ஆம் ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 297,143 குத்தகை தொகை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.	ரூபா 141,437 தொகை அறவிடப்பட்டுள்ளது.	முறையான வகையில் செயற்பட்டு, குறித்த காலப்பகுதியில் சரியான வீட்டு குத்தகையை அறவிடாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும், நிலுவையில் உள்ள வீட்டுக் குத்தகை தொகையை விரைவாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	11 பிரதேச செயலகப் பிரிவுகளில் 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் காட்டு யானைகள் உட்பட வன விலங்குகளால் 528 சொத்துச் சேதங்களும், 32 உடற் சேதங்களும், 30 உயிர்ச் சேதங்களும் பதிவாகியிருந்தன. அதற்காக ரூபா 52,619,280/- நஷ்டஈடு வழங்கப்பட்டிருந்தது. வெல்லவாய மற்றும் தனமல்வில ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள் மட்டத்தில் ஏற்பட்டுள்ள சொத்து, உடற்	வன விலங்குகளால் ஏற்படும் சேதங்களுக்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து 11 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், இந்த நிலமையைத் தடுப்பது சம்பந்தமாக ஒரு தேசிய கொள்கையைத் தயாரித்தல் வேண்டும்.	வன விலங்குகளால் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்காக முறையான திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

	மற்றும் உயிர்ச் சேதங்களின் அளவு ஒப்பீட்டளவில் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருந்தது என அவதானிக்கப்பட்டதுடன், மாவட்டச் செயலகத்தினால் திட்டங்களைத் தயாரிக்கும்போது, இந்தப் பிரச்சினை தீர்ப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து பயனுள்ள நடவடிக்கைகளை எடுப்பதற்கு உடனடியாக செயற்பட்டுள்ளதாக கணக்காய்வுக்கு அவதானிக்கப்படவில்லை.		
(ஈ)	நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் மூலம் முதியோர் மற்றும் நிறுவனமயமாக்கப்பட்ட உறைவிடக் கொடுப்பனவுகள், அங்கவீனர்களுக்கான கொடுப்பனவுகள், சிறுநீரகங்களுக்கான கொடுப்பனவுகள், அஸ்வெசும மற்றும் நூற்றாண்டு நிரம்பல் கொடுப்பனவுகளின் கீழ் மொனராகலை மாவட்டச் செயலகத்தின் ஊடாக 11 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய பயனாளிகளுக்கு வழங்குவதற்காக ரூபா 951,198,069 ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து ரூபா 30,727,337 பெறுமதியான ஒதுக்கீடு முறையான ஆய்வின்றிப் பெற்றுக்கொள்ளப்பட்டதாலும் பொருத்தமான பயனாளிகள் தெரிவு செய்யப்படாமையினாலும் திரும்ப ஒப்படைக்கப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் காத்திருப்போர் பட்டியலில் மீண்டும் பயனாளிகளை உள்ளீர்ப்பது தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அதன் காரணமாகவே இந்தப் பணம் எஞ்சியுள்ளதுடன், எதிர்காலத்தில் முறையாகவும் விரைவாகவும் பயனாளிகளுக்கு கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்	சட்டரீதியான ஏற்பாடுகளின்படி நோக்குடைய பணிக்காக ஒதுக்கீட்டைப் பயன்படுத்தாத உத்தியோக-த்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும், வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளை அதி உச்ச வினைத்திறனுடன் பயன்படுத்தக்கூடிய ஒரு வேலைத்திட்டத்தை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	வெல்லவாய பிரதேச செயலகத்தினால் 2019 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மத்தியதர வகுப்பினர் கொள்வனவு செய்யும் விலை அடிப்படையில் காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட 4 பயனாளிகளிடமிருந்து தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் நிலுவையில் உள்ள வட்டி (Arrears of interest) ஆகிய வகையில் ரூபா 365,920 கணக்காய்வு தினமான 2024 நவம்பர் 30 ஆம் திகதி வரையில் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிலுவையில் உள்ள தொகையை அறவிடுவதற்காக மீண்டும் நினைவூட்டல் கடிதங்கள் (Reminder letters) அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக.	குறித்த காலப்பகுதியில் தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டியை அறவிட நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும், நிலுவையில் உள்ள தவணைகள் மற்றும் வட்டி நிதியை விரைவாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	வெல்லவாய பிரதேச செயலகத்தினால் விவசாய நடவடிக்கைகளுக்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் 2019 ஒக்டோபர் 11 ஆம் திகதி இலக்கம் 4/10/5700 இற்குரிய அனுமதிப்பத்திரத்தின் கீழ் அரசாங்க காணியொன்று குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன்,	2020 ஒக்டோபர் 08 ஆம் திகதி குத்தகைதாரர் விபத்துக்குள்ளாகி, நடாத்தி வந்த தொழில் மூடப்பட்டு, வருமான வழிகள் இல்லாததால் குத்தகை தொகை செலுத்த	குறித்த காலப்பகுதியில் தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டியை அறவிட நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும், நிலுவையில்

	அதற்காக 2015 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையில் அறவிடப்பட வேண்டிய நிலுவைக் குத்தகை தொகை ரூபா 1,960,000 மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் நவம்பர் 29 ஆம் திகதி வரையிலும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	முடியாது என்று ஒரு மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.	உள்ள தவணைகள் மற்றும் வட்டி நிதியை விரைவாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	இறந்த, ஓய்வுபெற்ற, பணி தடை செய்த மற்றும் பதவி வெறித்தாக்கிய 18 உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாக மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் திசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்களின் பெறுமதி ரூபா 3,001,480 ஆக இருந்ததுடன், அந்தக் கடன் மீதியில் 20 வருடங்களுக்கும் மேலாக அறவிடப்படாமல் உள்ள ஊழியர் கடன்களின் பெறுமதி ரூபா 1,413,451 ஆக காணப்பட்டது.	2024 திசெம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி, இறந்த, ஓய்வுபெற்ற, பணித்தடை செய்யப்பட்ட மற்றும் பதவி வெறித்தாக்கிய உத்தியோகத்தர்களிட-மிருந்து அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 3,001,480 ஆக காணப்பட்டது.	குறித்த காலப்பகுதியில் தவணைக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டியை அறவிட நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும், நிலுவையில் உள்ள தவணைகள் மற்றும் வட்டி நிதியை விரைவாக அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இற்கு அமைவாக, அடையப்பட வேண்டிய இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்கான தயார்நிலை குறித்த பரிசோதனையின்-போது, மாவட்டச் செயலகத்தினால் 2024 ஆம் ஆண்டில் அது தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்றும், அந்த ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 01 மட்டுமே இனங்காணப்பட்டிருந்தது என்றும் அவதானிக்கப்பட்டது.	மொனராகலை மாவட்டத்-திற்குப் பொருத்தமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டுள்ளதாக.	நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இற்கு அமைவாக இலக்குகளை இனங்கண்டு, அவற்றை அடைந்துகொள்ளக்கூடிய வகையில் வருடாந்த திட்டங்களைத் தயாரிப்-பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	2024 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளலின் கீழ், “எல்லா இடங்களிலும் நிலவும் எல்லா வகையிலுமான வறுமையை முடிவுக்குக் கொண்டுவருதல்“ என்ற இலக்கின் முன்னேற்றம் நூறு சதவீதம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டில் மொனராகலை மாவட்டத்தில் அஸ்வெசும சலுகைகளைப் பெறும் 54,638 பயனாளிகள் இருப்பதனால், வறுமையை	சதவீதமாக காட்டப்பட்டு-ள்ளமையானது, இனங்-காணப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட இலக்குகளாகும். மேலும், எதிர்காலத்தில் இந்தக் கணக்கிடல்களை பயனாளி-களின் பொருளாதார பலம் குறித்தும் கவனத்திற்-கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.	செவ்வையற்ற தரவுகளை உள்ளடக்கி அறிக்கை-களைத் தயாரித்தல் தொடர்பில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும், எதிர்-காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதன் செயலாற்றலை

	முடிவுக்குக் கொண்டுவருதலின் முன்னேற்றம் நூறு சதவீதம் எனக் காட்டுவது சரியானதல்ல என அவதானிக்கப்பட்டது.		சரியாக காட்டுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6. நல்லாளுகை

6.1 உள்ளகக் கணக்காய்வு

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, ஒரு பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், 5 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் 3 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களை கொண்டுள்ளது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் மாவட்டச் செயலகத்திற்காக எந்தவொரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன், படல்கும்பூர பிரதேச செயலகத்திற்காக ஒரேயொரு உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மட்டுமே வழங்கப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டில் தேசிய மட்டத்தில் தேர்தல்கள் நடாத்தப்பட்டதுடன், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பதவியணியும் தேர்தல் கடமைகளுக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.	உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றாதது தொடர்பில் முறையான விசாரணையொன்றை மேற்கொள்வதற்கும், முறையான திட்டமொன்றைத் தயாரித்து உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளை வலுப்படுத்திக் கொள்வதற்காக உள்ளக கணக்காய்வுப் பிரிவைப் மீளக்கட்டமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

7. மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பதவியணியின் விபரங்களின்படி, மொனராகலை மாவட்டச் செயலகம் மற்றும் 11 பிரதேச செயலகங்களில் அனுமதிக்கப்பட்ட பதவியணி தொகையில், நிறைவேற்றுத் தரத்திலான 15 பதவிகள், மூன்றாம் தரத்திலான 14 பதவிகள், இரண்டாம் தரத்திலான 119 பதவிகள் மற்றும் ஆரம்பத் தரத்திலான 2 பதவிகள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் வெற்றிடங்களாகக் காணப்பட்டதுடன், இரண்டாம் தரத்தில் 210 ஊழியர்கள் மேலதிகமாக இருந்தனர்.	இது சம்பந்தமான தகவல்கள் பொது நிர்வாக அமைச்சிற்கு வருடாந்தம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	முறையான வகையில் பதவியணி மீளாய்வொன்றை மேற்கொண்டு, வெற்றிடமாக உள்ள பதவிகளை நிரப்புவதற்கும், மேலதிகமான பதவிகள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் தேவையான செயற்திட்டங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஆ)	2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதியிடப்பட்ட 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய, ஒரே பதவியில் /சேவை நிலையத்தில் அதிகபட்சம் 5 வருடங்கள் சேவை செய்துள்ள ஒவ்வொரு உத்தியோகத்தரும் வேறு சேவை நிலையங்களில் சேவையாற்றுவதற்கு இடமளிப்பதற்காக இடமாற்றம் செய்யப்படுதல் வேண்டும். மடுல்ல, புத்தல, படல்கும்புர மற்றும் வெல்லவாய ஆகிய பிரதேச செயலகங்களில் சேவையில் ஈடுபட்டிருந்த 282 உத்தியோகத்தர்கள், 2024 நவம்பர் 08 ஆம் திகதி நிலவரப்படி, 6 வருடங்கள் முதல் 31 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு ஒரே சேவை நிலையத்தில் சேவையில் ஈடுபட்டிருப்பது அவதானிக்கப்பட்டது.	2025 ஆம் ஆண்டில் உள்ளக இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட துடன், இந்தச் செயன்முறையை வருடாந்தம் முறையாகச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் முறையான வகையில் செயற்பட்டு இடமாற்றங்களை வழங்குதல் வேண்டும்.
(இ)	10 பிரதேச செயலகங்களில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 633 ஆக இருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 452 ஆக காணப்பட்டதால் 181 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேலதிகமாக உள்ளனர் என அவதானிக்கப்பட்டது. தற்போதுள்ள 633 அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் செலவிடப்பட்ட சம்பளச் செலவு ரூபா 502,527,235 ஆக இருந்ததால், மேலதிக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பொருட்டு செலுத்தப்பட்ட சம்பளம் பயனளிக்காத செலவாக காணப்பட்டுள்ளது.	புதிய பதவிகள் அங்கீகரிக்கப்பட்டதாக கருத்தில் கொண்டு அபிவிருத்தி உத்தியோக-த்தர்களை இணைக்-குமாறு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலு-வல்கள் அமைச்சிலிருந்து அறிவுறுத்தல் கிடைத்-திருந்ததுடன், அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தகவல்கள் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	மேலதிக அபிவிருத்தி உத்தியோகத்தர்-களிடமிருந்து பயனுள்ள மற்றும் வினைத்திறனான சேவையைப் பெற்றுக்-கொள்ளக்கூடிய வகையில் முறையான வேலைத்-திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.